# 2024-2025

# DBT On-Site Visit

## கொங்கு கலை, அறிவியல் கல்லூரியில் நட்சத்திரக் கல்லூரி திட்ட அறிமுக நிகழ்ச்சி

**ஈரோடு**

ஈரோடு கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் அறிவியல் துறைகள் சார்பில், முதலாமாண்டு மாணவ, மாணவியருக்கு 'நட்சத்திரக் கல்லூரி திட்டம்' குறித்த அறிமுக நிகழ்ச்சி நடைபெற்றது.

கல்லூரி தாளாளர் பி.டி. தங்கவேல் தலைமை வகித்தார். திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் யு.மு.வித்யா வரவேற்றார். கோவை பிஎஸ்ஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் நுண்ணுயிரியல் துறை இணைப் பேராசிரியர், முன்னாள் முதல்வர் மற்றும் நட்சத்திரம் கல்லூரி திட்ட வழிகாட்டி முனைவர் ஆர்.ராஜேந்திரன் பங்கேற்று நட்சத்திர கல்லூரி திட்டங்கள் குறித்து பேசினார்.

முன்னதாக கல்லூரி முதல்வர் முனைவர் எச்.வாசுதேவன் வாழ்த்துரை வழங்கினார். தொழில்நுட்பம், கணிதம், கணினி அறிவியல் மற்றும் இயற்பியல் துறையினர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்தனர். கணினி அறிவியல் துறை தலைவர் பி.ரமேஷ், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர்.




ஈரோடு கொங்கு கலை, அறிவியல் கல்லூரியின் அறிவியல் துறைகள் சார்பில் நடைபெற்ற 'நட்சத்திரக் கல்லூரி திட்டம்' அறிமுக நிகழ்ச்சியை கோவை பிஎஸ்ஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் நுண்ணுயிரியல் துறையின் இணைப் பேராசிரியர், முன்னாள் முதல்வர் மற்றும் நட்சத்திரக் கல்லூரித் திட்ட வழிகாட்டி முனைவர் ஆர்.ராஜேந்திரன் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

**தினமணி**

2/1

## கொங்கு கலை, அறிவியல் கல்லூரியில் நட்சத்திரக் கல்லூரி திட்ட விளக்க கூட்டம்



நிகழ்வில் பேசுகிறார் நட்சத்திரக் கல்லூரி திட்ட வழிகாட்டி பேராசிரியர் ஆர்.ராஜேந்திரன்.

**ஈரோடு, செப். 27:** கொங்கு கலை, அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு மாணவர்களுக்கான நட்சத்திரக் கல்லூரி திட்டம் குறித்த அறிமுக நிகழ்ச்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

உயிர் வேதியியல், உயிரித் தொழில்நுட்பம், கணிதம், கணினி அறிவியல் மற்றும் இயற்பியல் துறைகள் சார்பில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு, கல்லூரித் தாளாளர் பி.டி.தங்கவேல் தலைமை வகித்தார்.

இதில், கோவை பிஎஸ்ஜி கலை, அறிவியல் கல்லூரியின் நுண்ணுயிரியல் துறையின் இணைப் பேராசிரியர் மற்றும் நட்சத்திரக் கல்லூரி திட்ட வழிகாட்டி ஆர்.ராஜேந்திரன் பங்கேற்று பேசியதாவது:

மத்திய அரசின் நிதியுதவி நிறுவனமான உயிரி தொழில்நுட்பத் துறையால் தொடங்கப்பட்டது நட்சத்திரக் கல்லூரி திட்டம். இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம், அறிவியல் துறைகளில் தரமான கல்வியை வழங்குவதாகும்.

இந்தத் திட்டத்தின்கீழ் அடிப்படை அறிவியல் மற்றும் சிறப்பு நுட்பங்களில் ஆசிரியர்களின் திறனை மேம்படுத்தும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மாணவர்களுக்கு சிறப்பு உள்கட்டமைப்பு வழங்கப்படுகிறது. இந்த திட்டம் மாணவர்கள் ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் தொழில்களுக்குச் செல்வதற்கும், இளநிலைப் படிப்புகளை வெற்றிகரமாக முடித்த பிறகு, எதிர்காலத்தில் சிறந்த மேல்படிப்புக்கும் வழிகாட்டுகிறது என்றார். இதில், கல்லூரி முதல்வர் ஹெச்.வாசுதேவன், திட்ட ஒருங்கிணைப்பாளர் வித்யா, கணினி அறிவியல் துறை தலைவர் ரமேஷ், பேராசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்றனர்.

# Workshop

RNI : TNTAM/2023/87739

தின கதிர் வரலாறு

DHINAKKATHER VARALARU

TAMIL MORNING DAILY

காலை நாளிதழ்

## கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் மாணவ, மாணவிகளுக்கான பயிலரங்கு

ஈரோடு, ஆக. 11

ஈரோடு, கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் கணினி அறிவியல் மற்றும் தகவல் பகுப்பாய்வு துறை சார்பில், மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கான பயிலரங்கு மூன்று நாட்கள் நடந்தது. பயிலரங்கிற்கு கல்லூரி தாளாளர் தங்கவேல் தலைமை வகித்தார்.

கல்லூரி முதல்வர் வாசுதேவன் முன்னிலை வகித்து பேசினார். சிறப்பாளராக பெங்களூரை சேர்ந்த நெட்வோர்க் பொறியாளர் வசந்தகுமார் பங்கேற்று, மென்பொருள் தொழில்நுட்பம், மென்பொருளின் எதிர் கால அவசியங்கள், தொழில் தொடர்பான தகவல்களோடு கிளவுட் மற்றும் அமேசான் இணைய தொடர்பான சேவைகள் குறித்த பயிற்சியை மாணவர்களுக்கு விளக்கமாக அளித்தார். மூன்றாம் ஆண்டு இளநிலை கணினி அறிவியல் துறையை சார்ந்த மாணவ, மாணவிகள் மற்றும் உதவி பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக, இளநிலை கணினி அறிவியல் துறையின் தலைவர் ரமேஷ் வரவேற்றார். உதவி பேராசிரியர் கோகிலா நன்றி கூறினார்.

## கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் மாணவ-மாணவிகளுக்கான பயிலரங்கு



ஈரோடு, ஆக. 9:

ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் கணினி அறிவியல் மற்றும் தகவல் பகுப்பாய்வு துறையின் சார்பில் மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கான பயிலரங்கு மூன்று நாட்கள் நடந்தது.

இந்த பயிலரங்கிற்கு கல்லூரியின் தாளாளர் தங்கவேல் தலைமை தாங்கினார். கல்லூரியின் முதல்வர் வாசுதேவன் முன்னிலை வகித்து பேசினார். சிறப்பு அழைப்பாளராக பெங்களூரை சேர்ந்த நெட்வோர்க் பொறியாளர் வசந்தகுமார் பங்கேற்று மென்பொருள் தொழில்நுட்பம் குறித்தும், மென்பொருளின் எதிர்கால அவசியங்கள் குறித்தும், தொழில் தொடர்பான தகவல்களோடு கிளவுட் மற்றும் அமேசான் இணைய தொடர்பான சேவைகள் குறித்த பயிற்சியை மாணவர்களுக்கு விளக்கமாக அளித்தார். இதில், மூன்றாம் ஆண்டு இளநிலை கணினி அறிவியல் துறையை சார்ந்த மாணவ-மாணவிகள் மற்றும் உதவி பேராசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர். முன்னதாக இளநிலை கணினி அறிவியல் துறையின் தலைவர் ரமேஷ் வரவேற்றார். நிறைவில், உதவி பேராசிரியர் கோகிலா நன்றி கூறினார்.

## கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் மாணவ, மாணவிகளுக்கான பயிலரங்கு

ஈரோடு, ஆக. 9–

ஈரோடு, கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் கணினி அறிவியல் மற்றும் தகவல் பகுப்பாய்வு துறை சார்பில், மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கான பயிலரங்கு மூன்று நாட்கள் நடந்தது.

பயிலரங்கிற்கு கல்லூரி தாளாளர் தங்கவேல் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் வாசுதேவன் முன்னிலை வகித்து பேசினார். சிறப்பாளராக பெங்களூரை சேர்ந்த நெட்வோர்க் பொறியாளர் வசந்தகுமார் பங்கேற்று, மென்பொருள் தொழில்நுட்பம், மென்பொருளின் எதிர்கால அவசியங்கள், தொழில் தொடர்பான தகவல்களோடு கிளவுட் மற்றும் அமேசான் இணைய தொடர்பான சேவைகள் குறித்த பயிற்சியை மாணவர்களுக்கு விளக்கமாக அளித்தார்.

மூன்றாம் ஆண்டு இளநிலை கணினி அறிவியல் துறையை சார்ந்த மாணவ, மாணவிகள் மற்றும் உதவி பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக, இளநிலை கணினி அறிவியல் துறையின் தலைவர் ரமேஷ் வரவேற்றார். உதவி பேராசிரியர் கோகிலா நன்றி கூறினார்.




ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில், கணினி அறிவியல் மற்றும் தகவல் பகுப்பாய்வு துறையின் சார்பில் மாணவ, மாணவிகளுக்கான பயிலரங்கில் பெங்களூரை சேர்ந்த நெட்வோர்க் பொறியாளர் வசந்தகுமார் பயிற்சி அளித்தார்.

# Engagements

## ENGAGEMENTS

### ERODE

**Kongu Arts and Science College:** Inauguration of Gender Champion Club, 9.45 a.m.; Inauguration of Cyber Crews Students' Association, 10 a.m.; Inauguration of English Literary Club Association, 10.30 a.m.

## ENGAGEMENTS

### ERODE

**Kongu Arts and Science College:** Industry interaction workshop, 9.30 a.m.; Hands-on workshop, 9.45 a.m.; Tamil Mandram inauguration, 10 a.m.

Part & 391/2, Kamaraj Road, Uppilipalayam Village, Coimbatore-641015

# Anti Drug Awareness Program

தினபூமி, கோவை
நவம்பர் 06, 2024
thinaboomi.com

## ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் போதைப்பொருள் எதிர்ப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி




ஈரோடு நவ.6-

ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் இளநிலை கணினி அறிவியல் மற்றும் தகவல் பகுப்பாய்வுத் துறையுடன் கல்லூரியின் போதைப் பொருள் தடுப்புக் குழு அமைப்பு இணைந்து போதைப்பொருள் எதிர்ப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியானது 26/10/24அன்று பெருந்துறை சிப்காட் தொழிற்பேட்டையில் நடைபெற்றது.

இதில் பெருந்துறை காவல்துறை உதவி ஆய்வாளர் கதிரவன் மற்றும் த வெங்கடாசலம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு போதைப் பொருளினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்தும் அதைப் பயன்படுத்துவதால் உடலும் மனமும் எவ்வாறு பாதிப்பிற்கு உள்ளாகிறது என்பது குறித்து மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் எடுத்துகூறினார்கள்.

மேலும் கல்லூரி மாணவர்களும் பொது மக்களும் போதைப் பொருளுக்கு எதிராக உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து இளநிலை கணினி அறிவியல் துறையைச் சார்ந்த மாணவர்கள் போதைப் பொருளுக்கு எதிராக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மௌன மொழி நாடகம் ஒன்றை *(mime show)* நடத்தினர். இந் நிகழ்விற்கு கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் தாளாளர் .பி. டி.தங்கவேல் முன்னிலை வகித்தார். கல்லூரியின் முதல்வர் தி.ஹ.வாசுதேவன் மற்றும் கணினி அறிவியல் துறைத் தலைவர் .பி.ரமேஷ் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ப்ரிளுக் பேஷனைச் சேர்ந்த எஸ்.மணிகண்டன் மற்றும் இளநிலை கணினி அறிவியல் துறையைச் சார்ந்த பேராசிரியர்கள் செய்திருந்தனர். இதில் 60க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்களும் 20க்கும் மேற்பட்ட பேராசிரியர்களும் பங்கேற்று பயனடைந்தனர்.